1986 மே 8]

அப்போது 10 ஆயிரத்திற்குள்ளே டர்ன் ஓவர் இருப்பவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இப்போது 50 ஆயிரம் வரையில் டர்ன் ஓவர் இருப்பவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. எனவே அப்படி வரி விலக்கு அளிக்கிற உத்தேசம் அரசுக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, அப்படி வரிவிலக்கு அளிக்க இயலாமல் போனால் எக்சைஸ் டியூட்டியை உயர்த்தி விட்டு இந்த வரியை எடுத்துவிடலாம். அது கன்வினியன்டாக இருக்கும். அப்படி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவர் அவர்களே, எக்சைஸ் டியூட்டி போடுகிற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 4 விழுக்காடு வரி விதிக்கலாம். அப்படி சட்டமிருந்தாலும் கூட சலுகை முறையில் இரண்டு விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தீப்பெட்டித் தொழிலை உற்சாகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைமலை நகரில் பிளாஸ்டிக் தொழிற்பேட்டை.

716—(* வினா எண் 6421)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகே உள்ள மறைமலை நகரில் பிளாஸ்டிக் தொழிற்பேட்டை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு முதலீட்டில் இது தொடங்கப்படும் ?

(இ) இதன் மூலம் வேலை வாய்ப்பு பெறுவோரின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த கேள்விக்கு உண்டு என்று பதில் சொல்வார்கள் என்று நினைத்து நான் வந்தேன். ஆனால் இல்லையென்று பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் பரவாயில்லை. வேறு யாராவது சென்னை அருகே இருக்கிற மறைமலை நகரில் பிளாஸ்டிக் தொழிற்சாலை அமைக்க வந்தால் அவர்களை ஊக்குவிப்பார்களா? அப்படி அவர்களை ஊக்குவிப்பதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, இல்லாத கேள்வியைக் கேட்கிறபோது இல்லை யென்றுதான் பதில் சொல்கிற அவசியம் ஏற்படுகிறது. மறைமலை நகரைப் பொறுத்த வரையில் இப்போது ஏராளமான தொழில் கூடங்கள் கட்டி முடித்திருக்கிறோம். ஏறக்குறைய 60 தொழில் கூடங்கள் அங்கே இருக்கின்றன. மேலும் 20 தொழில் கூடங்களை இந்த ஆண்டு கட்ட உத்தேசித்திருக்கிறோம். ஆனால் பிளாஸ்டிக் தொழிலை துவங்க வேண்டுமென்று யாரும் தொழில் கூடம் கோரி விண்ணப்பிக்கவில்லை. அப்படி விண்ணப்பித்தால் அவசியம் நடவடிக்கையெடுத்து அவர்களுக்கு உதவி செய்யப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, உறரியானா போன்ற மாநிலங்களில் இப்படி சிறுதொழில்களைச் செய்யும் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் விற்பனையாகாவிட்டால், அந்த அரசே அந்தப் பொருள்களை எடுத்து விற்பனை செய்கிறது. அந்த அடிப்படையில் இப்படி பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் செய்யக்கூடிய பொருள்களாக இருந்தாலும், மற்ற சிறு தொழில்கள் மூலம் செய்கிற பொருள்களாக இருந்தாலும், அவை விற்பனையாகா விட்டால் அந்தப் பொருள்களை நமது அரசே எடுத்து விற்பனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனைக்கான எல்லா ஏற்பாடுகளையும் சிட்கோ நிறுவனம் செய்து வருகிறது. உற்பத்தி செய்யப்படுகின்ற இந்த பொருட்களை விற்பதற்கான தகுந்த ஏற்பாடுகளை மாநிலத்திற்கு உள்ளேயும் மாநிலத்திற்கு வெளியிலேயும் தொடர்ந்து செய்து வருகிறது. ஆகவே விற்பனை இல்லை என்று சொல்வதற்கு இடம் அளிக்காமல் சிட்கோவிலே பதிவு செய்து கொண்டால், நிச்சயம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழனியில் பழ தொழிற்பேட்டை.

717—(* வினா எண். 7908)—திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியில் பழம் பதப்படுத்தும் தொழில் உட்பட அதன் தொடர்பான தொழில்களுக்கு தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (அ) இல்லை,

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

தேசிய கூட்டுறவுச் சங்கம் மூலம் வெங்காய ஏற்றுமதி.

625—(* வினா எண். 8968)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84, 1984-85 ஆண்டுகளில் NAFED நிறுவனம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தமிழகத்தில் கொள்முதல் செய்த வெங்காயத்தின் அளவு எவ்வளவு?

(ஆ) அதை அதிகரிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?